## 2 வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்

காசியில் துர்வாச முனி ஓர் சிவலிங்கம் வைத்து பூஜித்து வந்தார். ஒரு சமயம் சிவபெருமான் முடியிலிருந்து பொற்றாமரை மலரொன்று கீழே விழ அதனை துர்வாச முனி தன் கரத்தில் ஏந்தி தேவலோகம் எடுத்துச் சென்றார். அப்போது இந்திரன் அரக்கர்களை வென்று தன் ஐராவதமான வெள்ளை யானை மீது பவனி வந்துக் கொண்டிருந்தான். துர்வாச முனி இந்திரனை ஆசீர்வதித்து அம்மலரை இந்திரனிடன் கொடுத்தார். அதனைப் பெற்ற இந்திரன் அம்மலரை ஐராவத்தின் தலை மீது வைத்தான். அவ்வானை அம்மலரை கீழே தள்ளி காலால் மித்தது.

அதனைக் கண்டு கோபம் கொண்ட முனிவர் செல்வச் செருக்கு கொண்ட இந்திரனை பாண்டிய வீரனொருவன், தனது சக்ராயுதத்தால் தாக்கும் போது அவனது தலை சிதறும் என்றும், வெள்ளை யானை காட்டானையாக காட்டில் திரியுமாறு சபித்தார். இந்திரன் துர்வாச முனியிடம் தன் செயலுக்கு வருந்தி மன்னிப்பு கோரினான். இது கண்டு மனமிரங்கிய அவர், பாண்டியன் இடும் ஆயுதம் தலையைத் தாக்காது அவனது கீரிடத்தை மட்டும் பறித்துச் செல்லும் என்று கூறினார். காட்டானையாக மாறிய ஐராவதம் நூறு ஆண்டுகள் காட்டில் திரிந்து பின் சுய நினைவு பெறும் என்று சாபமிட்டார்.

காட்டில் சுற்றித் திரிந்த அந்த வெள்ளை யானை இந்திரனால் உருவாக்கப்பட்ட கடம்பவனம் அடைந்தது. அதற்குள் நூற்றாண்டுகள் கழிந்ததால் தன்னுடைய சாபம் நினைவில் வர பொற்றாமரை தடாகத்தில் நீராடி தனது சுய உருவு பெற்றது. தனது துதிக்கையால் பொற்றாமரை தீர்த்தத்தை முகர்ந்து ஈசனுக்கு அபிஷேகம் செய்து பொற்றாமரை மலரால் பூஜை செய்தது. இதனால் மனமகிழ்ந்த ஈசன் வேண்டிய வரமளிப்பதாக கூறினார்.

ஐராவதம் அக்கோயிலை தாங்கும் எட்டு யானைகளுடன் தான் ஒன்பதாவது யானையாக இருக்க அருள வேண்டியது. ஆனால் இறைவனோ தன்னிடம் அன்புக் கொண்ட இந்தரனிடம் செல்வதே தனக்கு மகிழ்ச்சி தரும் என்று கூறி பல வரங்கள் அளித்தார். பின் வெள்ளை யானை மேற்கு திசையில் ஐராவதபுரம் அமைத்து அதில் ஐராவத்தீர்த்தையும் அமைத்து இந்திரேசன் என்ற சிவலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து அன்போடு பூஜை செய்தது

வந்தது. பின்பு இந்திரனால் அனுப்பிய தேவர்களுடன் இந்திரலோகம் அடைந்தது.

**பல்லவி**

கருணையை என்னென்று சொல்வேன்
கடம்பவனத் துறையும் கயிலேசனே

**அனுபல்லவி**

துருவசமுனி உன்னை பூசித்து தந்த ஓர்
மலரை மிதித்த வெள்ளையானை சாபம் தீர்த்தோனே

**சரணம்**

சாபம் தீர்ந்தயானை தன் தவறுக்கு வருந்தி
ஐராவதபுரத்தில் இந்திரேசனாக பூசிக்க
தாபம் கொண்ட இந்திரன் தானே அழத்திட
ஆனை அமரலோகம் அடைந்திடச் செய்தோனே